DINAMALAR

28 AUG 2023

PAGE 4

# கணிதத்தில் சிறந்து விளங்கினால் பிற துறைகளிலும் சாதிக்கலாம்

## துணைவேந்தர் குர்மீத் சிங் பேச்சு




■ புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் கணிதத் துறை சார்பில் நடந்த எல்லையற்ற பரிமாண பகுப்பாய்வு குறித்த 29வது ஐந்து நாள் சர்வதேச மாநாட்டில் துணை வேந்தர் குர்மீத் சிங் பேசினார்.

**புதுச்சேரி, ஆக. 28–**

கணிதத்தில் சிறந்து விளங்கினால், மற்ற அனைத்து துறைகளிலும் சாதிக்கலாம் என துணை வேந்தர் குர்மீத் சிங்பேசினார்.

புதுச்சேரி பல்கலை கணிதத் துறை சார்பில் எல்லையற்ற பரிமான பகுப்பாய்வு மற்றும் பயன்பாடுகள் குறித்து 29வது ஐந்து நாள் சர்வதேச மாநாடு நடந்தது.

மாநாடு ஒருங்கிணைப்பாளர் ராகேஷ்குமார் பர்மாரின் வரவேற்றார். பல்கலை இயக்குநர்தரணிக்கரசு தலைமை தாங்கினார்.

மாநாட்டில் ரஷ்யா, அமெரிக்கா, ஜப்பான், தென் கொரியா, சிரியா, குரோச்செட் மற்றும் மலேசியா நாடுகளில் இருந்து சர்வதேச பிரதிநிதிகள் மற்றும் 100க்கும் மேற்பட்ட இந்திய பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

மாநாட்டில் புதுச்சேரி பல்கலை துணைவேந்தர் குர்மீத் சிங்பேசியதாவது:

கணிதத்தில் சிறந்து விளங்குபவரால், பிற துறைகளிலம் சிறப்பாக செயல்பட்டு சாதிக்க முடியும். அந்த அளவிற்கு அனைத்து துறைகளிலும் கணிதத்தின் பயன்பாடு மேலோங்கி உள்ளது.

உலகெங்கிலும் உள்ள கணிதவியலாளர்களை ஒன்றிணைத்து விவாதித்து கணிதத்தில் அதிவேகமாக வளர்வதற்கான முயற்சியை மேற்கொண்டுவருகின்றனர்.இந்த முயற்சி பாராட்டுக்குரியது. கணிதத்தை முன்னேற்றுவதில் இந்த மாநாடு முக்கிய பங்கு வகிக்கும் என்றார்.

தொடர்ந்து நடந்த சிறப்பு அமர்வுகளில் பல்வேறு நாடுகளை சேர்ந்த கணித பேராசிரியர்கள் பேசினர். 'டோபோலாஜிக்கல் இன்சுலேட்டர்களின் கோட்பாட்டில்' உள்ள கணித சிக்கல்கள்குறித்து ரஷ்யாவின் ஸ்டெக்லோவ் கணித நிறுவன பேராசிரியர் ஆர்மென் செர்ஜிவ், ஜப்பானின் டோஹோகு பல்கலைக்கழக பேராசிரியர் தோஷியுகி சுகாவா ஹைபர்போலிக் கலந்துரையாடி விளக்கம் அளித்தனர்.

DINAKARAN

28 AUG 2023

PAGE 14

# புதுவை பல்கலையில் சர்வதேச மாநாடு

**புதுச்சேரி, ஆக. 28:** புதுவை பல்கலைக்கழகத்தின் கணிதத்துறை சார்பில் எல்லையற்ற பரிமாண பகுப்பாய்வு மற்றும் பயன்பாடுகள் பற்றிய 29வது சர்வதேச மாநாடு பல்கலைக்கழகத்தில் உள்ள கலாசார மற்றும் மாநாட்டு மையத்தில் 5 நாட்கள் நடைபெற்றது. பேராசிரியரும், ஒருங்கிணைப்பாளருமான ராகேஷ் குமார் பர்மாரின் வரவேற்றார். பல்கலைக்கழக இயக்குனர் தரணிக்கரசு தலைமை தாங்கினார். பதிவாளர் ரஜ்னிஷ் பூடானி வாழ்த்துரை வழங்கினார். சென்னை ஐஐடி பேராசிரியர் பொன்னுசாமி, பேராசிரியர் திபோர் பகானி, எமிரேட்ஸ் பேராசிரியர் ரிஜாகா ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

இம்மாநாட்டில் பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் பங்கேற்று பேசுகையில், ஒருவர் கணிதத்தில் சிறந்து விளங்கினால், மற்ற எல்லா துறைகளிலும் அவர் சிறப்பாக செயல்படுவார் என கூறினார். மேலும், ஜப்பான், ரஷ்யா மற்றும் கொரியாவுடனான தனது ஆரம்பகால ஒத்துழைப்பை நினைவு கூர்ந்தார். கணிதத்தை முன்னேற்றுவதில் இந்த மாநாட்டின் முக்கிய பங்கையும் குறிப்பிட்டு பேசினார்.

இம்மாநாட்டில் ரஷ்யா, ஜப்பான், தென் கொரியா, சிரியா, குரோச்செட், மலேசியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் இருந்து சர்வதேச பிரதிநிதிகள் மற்றும் 100க்கும் மேற்பட்ட இந்திய பங்கேற்பாளர்கள் கலந்துகொண்டனர். பேராசிரியர் தியோஷிகி சுகாவா, கணிதத்துறைத் தலைவர் ஜோசப் கென்னடி ஆகியோர் நன்றி கூறினர்.